1972 மார்ச் 18]

Cholera in Srirangam Town

* 550 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Srirangam Town in Tiruchirappalli District was declared cholera infected in December 1971; and

(*b*) if so, the steps taken to prevent the epidemic from spreading?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருச்சி மாநகராட்சியில் காலரா பரவியிருந்ததால், அது திருவரங்கம் நகராட்சியில் பரவாமலிருக்க தடுப்பு ஊசி குத்துதல், குடிநீரில் பாசிகையிடுதல், சுற்றுப்புற துப்புரவுப் பணிகளை தீவிரமாக்கல் போன்ற நடவடிக்கைகள் திருவரங்கத்தில் மேற்கொள்ளப்பட்டன.

THIRU N. DENNIS: Sir, may I know whether sufficient quantity of preventive medicine for the same is supplied to all hospitals, dispensaries and primary health centres?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எந்த வட்டாரத்தில் காலரா நோய்க்கான அடையாளம் இருக்கிறதோ, அந்த வட்டாரத்தைச் சுற்றி மருந்துகள் தெளிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். அந்த முறையில் திருச்சியில் ஏற்பட்ட காலரா நோய்த் தாக்குதல்களுக்குப் பரிகாரம் காணுகின்ற முறையில் திருவரங்கத்திலும் சேர்த்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் எக்ஸ்ரே படங்கள்

* 551 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே பிரிவில் ஒரு நாளைக்கு எத்தனை (X-ray) படங்கள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நாள் ஒன்றுக்கு சராசரியாக 124 எக்ஸ்ரே படங்கள் அந்த மருத்துவமனையில் எடுக்கப்படுகின்றன.

[1972 மார்ச் 18

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதுபோல் குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு அதிகமான குழந்தைகள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றன. குழந்தைகள் வருகின்ற அளவிற்குத்தகுந்தாற்போல் எக்ஸ்ரே போன்றவை எடுப்பதற்கான பிலிம் போன்றவை பற்றுக்குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, வருகின்ற எல்லாக் குழந்தைகளுக்கும் வைத்தியம் அளிக்கும் வகையில் தேவையான பிலிம் போன்றவைகளை சப்ளை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறுவதற்காக குழந்தைகள் அதிகமான அளவில் வந்தாலும், எக்ஸ்ரே படம் எடுப்பதற்கான வகையில் இருக்கக்கூடிய குழந்தைகள் குறைவாகத்தான் இருக்கும். பல்வேறு விதமான நோய்களுக்கு "டயகனேஸ்" பண்ணுகின்ற நேரத்தில் எக்ஸ்ரே படம் எடுக்கக்கூடிய குழந்தைகள் குறைவாகத்தான் இருக்கும். ஆகவே, அந்த வகையில் அந்த ஆஸ்பத்திரியில் தேவையான பொருகள் நிறைவுடையதாகத்தான் இருக்கிறதென்று நான் கருதுகிறேன்.

Hosur Cattle Farm

* 552 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to introduce woolly type of sheep at Hosur cattle farm in Dharmapuri district; and

(b) if so, the variety of sheep proposed to be introduced?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) ஒசூர் கால்நடைப் பண்ணையில் சீமைக் கலப்பினப் பெருக்கத்திற்காக, ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் கிடாய்களை அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பும், ரஷ்ய மெரினோ செம்மறி ஆடுகளை அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பும் ஆய்வில் உள்ளன.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, அதேமாதிரி "ரெட் டேன்", "ப்ரௌன்", "ஸ்விஸ்" போன்ற மாடுகளை இறக்குமதி செய்து தமிழ்நாட்டில் அதிகமான அளவிற்கு இன விருத்தி செய்ய அரசு முன்வருமா?